**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| மனைப்பொருளியல் | தரம் :- 12 (2019) | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

01. ஒரே இயல்பை வெவ்வேறு இடங்களில் இடம்பெறச் செய்து அதன் மூலம் பார்வையை செலுத்துவதன் மூலம் ஏற்படும் சந்தம்
1) ஒழுங்குமுறை 2) மீளுதல் 3) எதிரமைத்தல் 4) பெயர்வு 5) ஆரை விரிவுக்கோடு

02. மனையில் இங்குமங்கும் நடமாடும் விதத்தில் பகுதிகளைத் திட்டமிடல்
1) திசைமுகம் 2) நெகிழும் தன்மை 3) நடமாடல் 4) எதிர்பார்ப்பு 5) கூட்டமைப்பு

03. ஒரு வீட்டின் கூரையின் உயரம் எத்தனை அடிக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்
1) 10 ½ அடி 2) 8 ½ அடி 3) 7 ½ அடி 4) 9 ½ அடி 5) 11 ½ அடி

04. ஒளி கசியும் கண்ணாடி எவ்வறைக்குப் பொருத்தமானது
1) படுக்கை அறை 2) வரவேற்பறை 3) சமையலறை
4) சாப்பாட்டறை 5) படிக்குமறை

05. மனையின் ஒரு செயற்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட பகுதியை பாதிப்பு ஏற்படாதவாறு வேறு செயற்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடிய தன்மையை எவ்வாறு அழைப்பர்
1) திசை முகம் 2) நடமாடல் 3) பாதுகாப்பு
4) நெகிழ்ச்சித் தன்மை 5) அந்தரக்கத் தன்மை

agaram.lk

06. மனையினை சீராகவும் ஆக்கப்பூர்வமாகவும் அழகுபடுத்தி அமைப்பதற்கென பின்பற்ற வேண்டிய கலைத்துவம் சார் அடிப்படை அம்சங்கள்
1) ரேகை, வடிவம், நிறம், இழையமைப்பு 2) ரேகை, வடிவம், நிறம், சந்தம்
3) ரேகை, நிறம், இழையமைப்பு, இசைவு 4) ரேகை, வடிவம், சந்தம், இசைவு
5) சமநிலை, சந்தம், விகிதசமம், இசைவு

07. ரேகைகளின் இயல்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன
A – பலம் B – மென்மை C – கௌரவம் D – ஓய்வு E – உயர்வு
மேலே தரப்பட்ட இரேகைகளின் இயல்புகளில் நேர் ரேகையின் இயல்புகளாகக் கருதக்கூடியது.
1) ABC 2) ACE 3) CDE 4) BCD 5) ADE

08. ஏதாவது ஒரு நிறம் பிரகாசமானது அல்லது இருள்மயமானது என்பதைக் காட்டுவது
1) நிறம் 2) பெறுமதி 3) சந்தம் 4) மென்மை 5) நிறச்செறிவு

09. பின்வருவனவற்றுள் எதிர்நிற இசைவாக அமைவது
1) சிவப்பு எதிர் ஊதா 2) செம்மஞ்சள் எதிர் நீலம் 3) செம்மஞ்சள் எதிர் பச்சை
4) பச்சை எதிர் நீலம் 5) நீலம் எதிர் மஞ்சள்

10. சூரிய ஒளி அதிகமாகக் கிடைக்கும் அறைக்கு உகந்த நிறங்கள்
1) நீலம், பச்சை, மஞ்சள் 2) நீலம், பச்சை, செம்மஞ்சள் 3) நீலம், பச்சை, ஊதா
4) நீலம், பச்சை, சிவப்பு 5) நீலம், பச்சை, மஞ்சட் செம்மஞ்சள்

11. ஓர் இடத்தின் நடுப்புள்ளியிலிருந்து இருபக்கங்களிலும் தூரம் உருவம் பாரம், நிறம் என்பன சமனாக இருத்தல்

1) சமச்சீரான சமநிலை  2) சமச்சீரற்ற சமநிலை  3) பெயர்வு
4) சந்தம்  5) இசைவு

12. மனைத்திட்டத்தைத் தயாரிப்பதிலும் அழகுபடுத்துவதிலும் முக்கிய இடம் பெறும் வடிவமைப்புக் கோட்பாடு

1) சமநிலை  2) சந்தம்  3) விகிதசமம்  4) இசைவு  5) ரேகை

13. பியர் மற்றும் அற்ககோல் உற்பத்தியில் முக்கியமான சக்கரை எது?

1) மொனோசக்கரைற்  2) டைசக்கரைற்  3) பொலிசக்கரைற்
4) செலுலோசு  5) ஒலிகோசக்கரைற்

14. மாரடைப்பு நோய் ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கும் கொழுப்பு அமிலம்

1) லினோலெயிக்கமிலம்  2) அரக்கிடோனிக்கமிலம்  3) கப்ரிக்கமிலம்
4) திரான்சு கொழுப்பு அமிலம்  5) பியூற்றிக் கமிலம்

15. விலங்குணவுகளில் அடங்கியுள்ள இரு காபோவைதறேற்றும்

1) குளுக்கோஸ், பெத்தீன்  2) கிளைக்கோஜன், சுக்குரோஸ்
3) கிளைக்கோஜன், இலற்ரோசு  4) செலுலோசு, பெத்தீன்  5) இலற்ரோசு, மோல்றோசு

16. உடலில் நாகத்தின் தொளிற்பாடு

1) இன்சுலினின் ஒரு கூறாகத் தொளிற்படல்
2) கல்சியம் அகத்துறிஞ்ச உதவும்
3) செல்குருதிக் கலங்களின் உற்பத்தி
4) நீர்ச்சமநிலையைக் கட்டுப்படுத்தல்
5) உடல் வெப்பநிலை பேணல்

17. உடற்திணிவுச் சுட்டியின் சமன்பாடு யாது?

1) $\frac{\text{நிறை kg}}{\text{உயரம்}}$  2) $\frac{\text{நிறை}^2\text{ kg}}{\text{உயரம்}^2\text{ m}}$  3) $\frac{\text{நிறை}^2\text{ kg}}{\text{உயரம் m}}$  4) $\frac{\text{நிறை kg}}{\text{உயரம் 2 m}}$  5) $\frac{\text{உயரம் m}}{\text{நிறை kg}}$

agaram.lk

விற்றமின்கள், கனியுப்புக்கள் தொடர்பாக மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கூற்றுக்கள் சில தரப்பட்டுள்ளன. இக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு **18,19,20,21ம்** வினாக்களுக்கு விடை தருக.

A – ஒட்சியேற்ற எதிரியாகத் தொழிற்படல்
B – தோலின் சிறந்த நிலைப்பாட்டிற்கு உதவும்
C – ஈமோகுளோபின் உற்பத்தி
D – இரும்பு அகத்துறிஞ்ச உதவும்
E – எலும்பு, பல் வளர்ச்சிக்கு உதவும்
F – மாலைக்கண், பீற்றோவின் புள்ளி ஏற்படல்
G – ஈரல், முட்டைமட்சட்கரு, இலைக்கறிவகை

18. விற்றமின் A, C என்பவற்றுடன் (ஏ, சீ) தொடர்புடைய கூற்றுக்கள்

1) A, B, D, F  2) B, C, G, E  3) D, E, A, B  4) E, F, G, A  5) C, D, F, B

19. இரும்புச்சத்து தொடர்பான கூற்றுக்கள்

1) FG  2) EB  3) CD  4) CG  5) AB

20. BE கூற்றுக்களுக்காக உள்ளெடுக்க வேண்டிய உணவுத்தொகுதி

1) பழங்கள், தானியங்கள்  2) கீரைவகை, கிழங்குவகை  3) பச்சை இலைவகை, இறைச்சி
4) கிழங்குவகை, தானியம்  5) மஞ்சள் நிறக்காய்கறிகள், பாலும் பாற்பொருட்களும்

21. D,E கூற்றுக்கள் குறிக்கும் போசனைக் கூறுகள்
1) விற்றமின் A. கல்சியம் 2) கல்சியம் விற்றமின் C 3) விற்றமின் A. இரும்பு
4) இரும்பு விற்றமின் C 5) விற்றமின் D. இரும்பு

22. உணவுச் சமிபாட்டால் இரைப்பையின் தொழில்
1) முன்சிறு குடலில் சமிபாட்டைத் தூண்ட ஓமோன்களைச் சுரத்தல்
2) அமினோ அமிலங்களை அகத்துறிஞ்சல்
3) புரதச் சமிபாடு ஆரம்பித்தல்
4) மாப்பொருள் மேலும் நீர்ப்பருப்பு அடைதல்
5) அமிலத்தன்மையைக் குறைக்க சீதம் சுரத்தல்

23. கொழுப்பு குழம்பாக்கல் செயற்பாட்டில் துணைபுரியும் சுரப்பு எது
1) உமிழ்நீர் 2) குடற்சாறு 3) சதையச்சாறு 4) இலிப்பேசு 5) பித்தச்சாறு

24. மாப்பொருள் சமிபாட்டின் இறுதி விளைவு
1) அமினோ அமிலம் 2) மோல்ற்றோசு 3) கொழுப்பு அமிலம்
4) தயலின் 5) கொழுப்பு அமிலம்

25. உடலியக்க விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணி
1) முதிர்ச்சி 2) போசாக்கு 3) உடற்பயிற்சி 4) சூழல் 5) அன்பு

(25 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களிற்கு விடைதருக.**

01. **கீழே தரப்பட்ட நிகழ்வுக் கற்கையை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

குறிப்பிட்ட பாடசாலை ஒன்றில் நடைபெற்ற போசாக்கு வார நிகழ்வின் போது நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கப்பட்டது. பாடசாலையில் வழமையாக வழங்கப்பட்ட மதிய உணவை விட மாணவர்கள் மிகவும் ஆர்வமுடன் அதனை உட்கொண்டு மகிழ்ந்தனர். நிகழ்விற்கு வருகை தந்த சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் உரையாற்றுகையில் தொற்று நோய்கள், தொற்றா நோய்கள் பற்றி சிறப்பாகச் சொற்பொழிவாற்றினார்கள்.

1) பாடசாலை நிகழ்வில் இலைக்கஞ்சி வழங்கியமைக்கான காரணங்கள் எவை?
2) உணவு வேளைகளைத் திட்டமிடும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?
3) போசனைக் குறைபாடுகள் ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?
4) போசனைக் குறைபாடுகளைத் தவிர்ப்பதில் தொடர்புறும் நிறுவனங்கள் எவை?
5) சரியான உணவுக் கோலத்தைப் பின்பற்றாமையால் ஏற்படும் தொற்றா நோய்கள் 2 குறிப்பிடுக.

(5X5=25 புள்ளிகள்)

02. **சிறப்பான வாழ்க்கைச் சூழலை உருவாக்க மனையானது திட்டமிடப்பட்டு அமைக்கப்படல் வேண்டும்.**

1) மனைத்திட்டமிடலில் பின்பற்ற வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகள் எவை?
2) தற்காலத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் கதவு, யன்னல் வகைகளைக் குறிப்பிட்டு அவை பிரசித்தி விளங்குவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக?
3) மனைக்கான நிலத்தைத் தெரிவு செய்யும் போது அவதானிக்க வேண்டிய சட்டரீதியான விடயங்கள் 3 தருக?

(4+3+3=10 புள்ளிகள்)

03. **கலையின் அடிப்படை அம்சங்களை அறிந்து செயற்பாட்டில் ஈடுபடுவோம்**

1) A. துணை நிறம் என்றால் என்ன? அவை எவை?
   B. அவை எவ்வாறு உருவாகிறது என்பதனைக் குறிப்பிடுக.
2) எதிர் நிற இசைவுகளைக் குறிப்பிடுக
3) சந்தத்தின் பல்வேறு முறைகளும் எவை?

(4+3+3=10 புள்ளிகள்)

04. **நல்வாழ்வுக்கு போசணைமிக்க உணவு இன்றியமையாதது**

1) காபோவைதரேற்றினை அட்டவணை மூலம் வகைப்படுத்திக் காட்டுக.
2) உடல் வளர்ச்சி தவிர்ந்த புரதத்தின் தொழிற்பாடுகள் 3 தருக.
3) ஒமேகா – 3 கொழுப்பு அமில வகைகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.

(4+3+3=10 புள்ளிகள்)

05. **உணவு சமிபாடு, அகத்துறிஞ்சல் மூலம் உடலியற் தொழிற்பாடு சிறப்பாக நடைபெறும்.**

1) A. சமிபாடு என்றால் என்ன?
   B. சமிபாடு சரியான முறையில் நடைபெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
2) சதையச்சாற்றின் சமிபாட்டு நொதியங்கள் எவை?
3) சமிபாட்டுத் தொகுதியில் நிகழும் தொழிற்பாடுகள் எவை?

(4+3+3=10 புள்ளிகள்)

06. **உடல் ஆரோக்கியத்திற்கு திட்டமிடல் அவசியல்.**

1) சாதாரண வேலை செய்யும் ஆண் ஒருவருக்கான மதிய உணவு வேலையைத் திட்டமிடுக.
2) உணவு வேளையைத் திட்டமிட்டுத் தயாரிப்பதன் நன்மைகள் எவை?
3) நாளாந்த போசனைத் தேவை என்றால் என்ன?

(4+3+3=10 புள்ளிகள்)

agaram.lk